# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

---

*(2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2022, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 15.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம்

[2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.- ஓ. 19/2017

### (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, கைத்தொழிற் பிணக்குகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். சுருக்கப்பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (131 ஆம் அத்தியாயமான) கைத்தொழிற் பிணக்குகள் சட்டத்தின் 46 ஆம் பிரிவானது, அதன் (1), (2) மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:- 131 ஆம் அத்தியாயத்தின் 46 ஆம் பிரிவினைத் திருத்துதல்

"(1) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால், நடுத்தீர்ப்பாளரினால், ஏதேனும் கைத்தொழில் நீதிமன்றத்தினால் அல்லது தொழில் நியாசபையினால் அல்லது ஆணையாளரினால் அல்லது அவர்களின் முன்னர் அல்லது அவற்றின் முன்னர் எடுக்கப்பட்ட இச்சட்டத்தின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கைக்கான எவரேனும் திறத்தவர் அத்திறத்தவரின் சட்டத்தரணியூடாக அல்லது அவரின் பிரதிநிதியூடாக செயலாற்றலாம்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, திறத்தவர் ஒருவரின் பிரதிநிதி-

(அ) திறத்தவர் தொழிற்சங்கம் ஒன்றாக இருக்குமிடத்து அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொழிற்சங்கங்களைக் கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தொழிற்சங்கத்தை அல்லது அத்தகைய

ஒவ்வொரு தொழிற்சங்கத்தையும் பிரதிநிதித்துவப் படுத்தும் ஆளொருவராக இருத்தல் வேண்டும்;

(ஆ) திறத்தவர் பகுதியளவில் ஏதேனும் தொழிற் சங்கத்தை அல்லது தொழிற்சங்கங்களை மற்றும் பகுதியளவில் தொழில்தருநர்களை அல்லது ஏதேனும் அத்தகைய தொழிற்சங்க உறுப்பினர்கள் அல்லாத வேலையாட்களை கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தொழிற்சங்கத்தை அல்லது அத்தகைய ஒவ்வொரு தொழிற்சங்கத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் ஆளொருவராக இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய தொழில்தருநர்களினால் அல்லது வேலையாட்களினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க பெயர்குறித்து நியமிக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினதான ஆட்களாகவும் இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) திறத்தவர் தொழில்தருநர்களை அல்லது வேலையாட்களை கொண்டுள்ளவிடத்து, அத்தகைய தொழில் தருநர்களினால் அல்லது வேலையாட்களினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட விதித்துரைக்கப்பட்ட எண்ணிக்கையினதான ஆட்களாகவும் இருத்தல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம், இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.*